REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55650

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 21உ புதன் (6—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 22உ வியாழன் (7—11—57) [இதழ் 124

கோவை அருகே ரூ. 4-கோடி செலவில் சர்க்கார் அச்சகம்

கோவை, நவ. 5—

கோவை அடுத்த பெரியநாயக்கன்பாளையத்தில் அச்சகம் ஒன்றை நிறுவ மத்திய சர்க்கார் உத்தேசித்துள்ளனராம்!

சுமார் 130 ஏகர் நிலப்பரப்பில் அமையும் இந்த அச்சகத்திற்கான இயந்திரங்கள், ரூ. 4 கோடிவரை செலவு செய்து வாங்கப்படுமாம்!

அச்சகத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தை மத்திய சர்க்கார் அதிகாரி ஒருவர் இன்று பார்வையிட்டுள்ளார்.

மாநில சர்க்கார்கள் மீது மத்திய மந்திரி குற்றச்சாட்டு!

சமுதாய நலத் திட்டங்களில் உரிய அளவு ஆர்வம் காட்டவில்லை

மக்கள் பிரதிநிதிகளும் அப்படித்தான் என்கிறார் டே

பெங்களூர், நவ. 5—

சமுதாய நலத் திட்டங்களுக்கும் கிராம—மக்கள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும்—தேவையான அளவு ஆதரவு தந்துள்ளனராம்; ஆனால், மாநில சர்க்கார்களும், சட்டசபை—மக்கள்சபை உறுப்பினர்களான மக்களின் பிரதிநிதிகளும்தான் தரவேண்டிய அளவு ஆதரவு தரவில்லை என்று, மத்திய சமுதாயநலத் திட்ட மந்திரி எஸ். கே. டே தெரிவித்திருக்கிறார்.

"இந்த நோக்கிலிருந்து பார்த்தால், திட்டங்கள், இன்னும் சாதிக்க வேண்டியவை பலப்பல என்பது தெரியவரும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"விவசாய உற்பத்தியில் பெருமளவு பெருக்கம் காண்பது, புரட்சிகரமான நிலச் சீர்திருத்தங்களின்றி சாத்தியமில்லை"

என்றும் அமைச்சர் எஸ். கே. டே தெரிவித்திருக்கிறார்.

வானுலக மண்டலங்களை அடைய!

ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சி

சந்திரன், செவ்வாய் போன்ற இதுவரை எட்டாத மண்டலங்களை மனிதர்கள் அடைவதற்கான சாதனங்களை ரஷ்ய விஞ்ஞானிகளும், எஞ்சினீயர்களும் தயாரித்து வருவதாக ரஷ்ய செய்தி நிறுவனமான 'டாஸ்' அறிவித்துள்ளதாம். இந்தச் சாதனத்தை மனிதர்களே, அந்த மண்டலங்களுக்கு ஓட்டிச் செல்வர் என்றும் கூறப்பட்டுள்ளது.

திட்டம் வெட்டப்பட்டால் நெருக்கடி தோன்றும்

நம்பூதிரிபாத் கருத்து

"திட்டத்தை வெட்டுவது என்பது ஒரு பெரும் தேசீய நெருக்கடிக்கு வழிவிடுவதாகும்; அதனால் சகல பகுதி மக்களும் பாதிக்கப்படுவர்"

என்று, கேரள முதலமைச்சர் நம்பூரிபாத், கல்கத்தா கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திட்டம், சிலர் கூறுவதுபோல, பேராசைத் திட்டம் அல்லவென்றும், காங்கிரஸ் சர்க்காரின் கொள்கைகள் திட்டத்தைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக நெருக்கடியைத் துரிதப்படுத்தவே உதவும் என்றும் அவர் கூறினாராம்!

அனுமதித்துவிட்டதாம்!

புதுடில்லி, நவ. 6—

மத்திய இரயில்வே போர்டு, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலையில் இரண்டாவது 'ஷிப்டு' துவங்குவதற்கு அனுமதித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

'ஸ்தல ஸ்தாபனங்களைத் திட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்காதீர்'

'அது ஜனநாயகத்தைப் பாழ்படுத்தும் ஏற்பாடாகும்'

'கட்சி அரசியலை ஒழிக்கக் கண்ணியமான உடன்பாட்டிற்குக் காங்கிரஸ் தயாரா?'

சட்டமன்றத்தில் அண்ணா கருத்துரை

சென்னை, நவ. 5—

"ஸ்தல ஸ்தாபனங்கள் நிரந்தரமானவை; திட்ட அமைப்புகள் நிரந்தரமானவையல்ல; எனவே, இரண்டையும் இணைப்பது அவ்வளவு சரியல்ல."

"டப்பிக்குள் மற்றொரு டப்பியைப் போடுவதால் சத்தமிருக்கலாம்; ஆனால் உருப்படியான பலன் இருக்காது"

—என்று, அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் மாவட்ட ஆட்சி மன்றங்களை மாற்றியமைப்பது பற்றிய 'வெள்ளை அறிக்கை' மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துக்கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த 'வெள்ளை அறிக்கை' மீது நடைபெறும் விவாதம் முடிந்த முடிவுகளை ஏற்றுக்கொள்வதாக இல்லாமல், முடிவுகள் ஏற்றதா என்று மன்ற உறுப்பினர்கள் ஆராய்ந்து கருத்துக்களை அறிவிக்கும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டது என்று நிதி அமைச்சர் கூறியதை நம்பிக்கையுடன் ஏற்று நான் இந்த அறிக்கையை ஆதரிக்கிறேன்.

"நம்பிக்கையுடன் என்று நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நண்பர் சின்னதுரை குறிப்பிட்டது போல, ஏற்கனவே திட்டத்தை தயாரித்துவிட்டு, ஒப்புக்கு இந்த விவாதம் நடத்தப்படுகிறதோ என்ற ஐயப்பாட்டிற்கு இடம் இல்லை என்று அமைச்சர் கூறியதை ஆதாரமாக நான் எடுத்துக்கொள்வதுதான்.

"தேசிய வளர்ச்சித் திட்டமும், சமுதாயநலத் திட்டமும் பெருத்த குழப்பமாகவே இருந்துவருகிறது. இந்தத் திட்டங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் தேடுவதற்கு முன்னர், ஸ்தல ஸ்தாபனங்களையும் மாற்றியமைக்கமுனைவதுதான் அரசாங்கத்தின் திட்டமோ என்று நான் அஞ்சுகிறேன்.

"எங்கள் ஊர்ப்பக்கத்தில், ஆடு வாங்கப் போகும்போது, ஆட்டையும் வாங்கி, கூடவே ஒரு பெண்ணையும் முடித்துவருவார்கள்; அதைப்போல, நீண்டகாலமாக உள்ள பிரச்சினையைத் தீர்க்கவும், ஸ்தல ஸ்தாபனங்களை ஒழித்துக்கட்டவும் ஆட்சியினர் முனைந்துள்ளனரோ என்று நான் அஞ்சுகிறேன்.

"ஒருபுறம் அரசாங்க இயந்திரம்—மற்றொருபுறம் திட்ட இயந்திரம் — இவ்விரண்டையும் ஒன்றாக இணைக்க முனைந்துள்ளனர்; அதிகாரிகளின் போக்கை பற்றி டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரன் குறிப்பிட்டார்கள். எங்கள் பக்கம் ஒரு அதிகாரியை பற்றித் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தனர்.

"இப்படி அதிகாரிகளின் அல்லல் போதாதா? மேலும் மக்கள், அதிகாரிகளிடம் கையேந்தும் நிலை உருவாகுமோ என்று நான் அஞ்சுகிறேன். இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி அதிகாரவர்க்கத்தை அதிகரிப்பதாகும்.

"ஒரு பத்து ரூபாய் நோட்டை மாற்றி, ஒவ்வொரு ரூபாயாகத் தருவதற்கு பதிலாக ஒரு பத்து ரூபாய் நோட்டைத் துண்டு துண்டாகக் கிழித்துத் தருவது

(4-ம் பக்கம் பார்க்க)

இரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம்!

நவம்பர் 25-ந் தேதி துவங்கலாம் என்கிறார் சங்கத் தலைவர்

இலட்சுமணபுரி, நவ. 4—

வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது பற்றி இரயில்வே ஊழியரிடை வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது 95 சதவிகித ஊழியர்கள் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாகவே கருத்தறிவித்துள்ளனர் என்றும், எனவே, தங்களின் கோரிக்கைகளுக்காக அவர்கள் நவம்பர் 25-ந் தேதிக்குமேல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடலாம் என்றும் அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவரான எஸ். குருசாமி இங்கு கருத்தறிவித்திருக்கிறார்.

கேட்டீரா, சேதி!

மாஸ்கோ, நவ. 6—

ரஷ்ய விஞ்ஞானிகள், கம்யூனிசத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழாவை 1967-ல் சந்திரனில் கொண்டாடக்கூடுமாம்!

இந்தியாவில் கடுமையான உணவுப் பஞ்சம்

'உதவி கிடைக்காவிடின் நாங்கள் பட்டினிதான்'

ஐ. நா. மாநாட்டில் டெல்லி மந்திரி ஒப்பாரி

புதுடில்லி, நவ. 5—

இந்தியாவில் உணவுத் தட்டுப்பாடு எந்த அளவு கடுமையாக இருக்கிறது என்பதை, ஐ. நா. உணவு மற்றும் விவசாய மாநாட்டில் பேசிய இந்திய சர்க்கார் உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் விளக்கியிருக்கிறார்.

"அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் இந்தியா, தனது சேமிப்பு உணவிலிருந்து எடுத்து உண்ண வேண்டியிருக்கும். பல பகுதிகளில் நிலவும் பஞ்சநிலை,சேமிப்பை ஈடுசெய்து பெருக்க முடியாமற் செய்துவிட்டது. பர்மா, அமெரிக்கா நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக 10 இலட்சம் டன்வரை உணவுப் பொருள் சேமிக்க முடிந்தது; ஆனால் இந்தச் சேமிப்புக்கூட, 1958 மத்தியில் கரைந்துவிடும்.

"இந்த நிலையைச் சமாளிக்க, எங்களுக்குள்ள இறக்குமதியை அதிகரிப்பதுதான்; ஆனால், அதற்கு இடையூறாக இருக்கிறது எங்களது அன்னிய செலாவணிநிலைமைகள்!

"விவசாயத்தையே நம்பியிருக்கும் பெரும்பான்மை மக்களுக்கு எதிர்பாராத நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதால், இதனைச் சமாளிக்கப் போதுமான உதவி எங்களுக்குக் கிடைக்காவிட்டால் நாங்கள் பட்டினி கிடக்க நேரிடும்"

என்று, மந்திரி ஜெயின் ஓலமிட்டிருக்கிறார்!

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ்

சென்னை 6—11—57 புதன்

உற்பத்தி பெருக!

அன்றாட வாழ்க்கைத்தேவைகளான உணவு முதலிய அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளும் ஏறிக்கொண்டிருக்கின்றன அவற்றைக் கட்டுப்படுத்தி. நியாய நிலைக்கு இறக்குகிற நோக்கம் பொறுப்புடையவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த விலைவாசி ஏற்றத்தினல், ஏழை-எளியோரும், மிகக் குறைவான வருமானமுடைய நடுத்தர மக்களும் படுகிற சொல்லொணுக் கஷ்டங்கள் சர்க்காருக்கு உறைக்கவில்லை. இந்த விலைவாசி ஏற்றம் பெரியதொரு பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவிக்கும் அபாயமுடையது என்பதையும் சர்க்கார் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இந்த விலைவாசி ஏற்றத்தால் வெகுவாகப் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களும், நடுத்தர மக்களும்—'எல்லா நெருக்கடிகளுக்கும் பரிகாரம் உற்பத்திப் பெருக்குத்தான்' என்றுகூறி—'அந்த இயக்கத்திற்கு ஒத்துழைக்க வேண்டும்' என்கிறார் மத்திய மந்திரி ஒருவர். ஒத்துழைப்பு யாரிடமிருந்து வரவேண்டியிருக்கிறது என்பதில் மந்திரிக்குத் தெளிவில்லைஎன்றுதான் சர்க்காரின் நடைமுறைகளைக் கண்டவர்கள் கூறமுடியும்.

எல்லாத் துறைகளிலும், உற்பத்திப் பெருக்கத்திற்கும் தன்னிறைவிற்கும் வழிசெய்வதே ஐந்தாண்டுத் திட்டங்கள் என்று கூறிவருகிறது சர்க்கார்.

ஆனல் முதல் திட்டம் முடிவுற்று இரண்டாம் திட்டம் அமுலாகிக்கொண்டிருக்கும் இக்காலத்திலும், உற்பத்திப் பெருக்கம் முதலிய எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கவில்லை என்பதை சர்க்காரே ஒப்பியுமிருக்கிறது. உதாரணமாக, முதல் திட்டத்தின் பிரதான அம்சங்களாக நீர்ப்பாசனத் திட்டங்கள் விளங்கின என்றும், அதன் காரணமாக உணவுத்துறையில் இந்தியா தன்னிறைவு பெற்றுவிட்டதாகவும் மத்திய மந்திரி ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போதே இன்னொரு மந்திரி, வெளிநாடுகளிலிருந்து உணவு இறக்குமதிக்காக 80 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டுமென மக்கள் சபையில் கேட்டுக்கொண்டிருந்தார்.

பழைய சம்பவம் அது; இன்று, நியாயவிலைக் கடைகளில்கூட மக்களுக்குத் தேவையான அளவு உணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை; தமிழ்நாட்டில் கடைகள் மூடப்படுகின்றன.

இதுபோன்ற எதிர்மறையான விளைவுகள், கசப்பான அனுபவங்கள், இரண்டாம் திட்டத்தின் கர்த்தாக்களுக்குத் திட்ட உருவாக்கத்தில் வழிகாட்டியிருக்க வேண்டும்; ஆனல்....!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றரை ஆண்டுக்காலமாக அமுலாகி வருகிறது. அந்த வேகமான நடவடிக்கைகளின் கொடிய விளைவுகளுள் ஒன்றுதான் விலைவாசி ஏற்றம்!

மற்றென்று, அன்னியச் செலாவணி அருகி வருவது. உள்நாட்டுச் செலவினிக்கான ஆதாரத் தொகையிலும் இப்போது கைவைத்தாகிவிட்டது.

மேலும், இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்று கூறி, ஏழை-எளியவர்களின் வாழ்வை, புதிய வரிக் கொடுமைகளாலும் பாரமாக்கினர்கள்!

இப்படி, ஒருபுறம் விலைவாசி ஏற்றத்தாலும், மறுபுறம் வரிக் கொடுமைகளாலும், ஏற்கனவே அரைகுறை வாழ்வு நடத்திக்கொண்டிருக்கும் ஏழை-எளிய மக்கள் படும் கஷ்டங்கள்தான், இந்தத் திட்டங்களின் கண்ணுக்குத் தெரியும் விளைவுகளாயிருக்கின்றனவே தவிர, வேறென்ன?

'உற்பத்திப் பெருக ஒத்துழைப்பீர்' என்று புன்னகை மலர வேண்டுகோள் விடுத்துப் பயன் என்ன?

அடைய விரும்பும் இலட்சியத்தில் தெளிவுபெற்று, தேவைகளையும் ஆற்றலையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, தேவைகளை வரிசைப்படுத்தி இணைத்து, போலி கௌரவங்களுக்கும் சுயவிருப்பு வெறுப்புகளுக்கும் இடமின்றி, அடைய விரும்பும் இலட்சியத்திற்கு வழிவகுப்பதே திட்டம் என்பதாகும்.

ஆனல், திட்டம் என்பது ஒரு இலட்சியத்தை, முறையாக அடையும் நேர்வழி என்று டெல்லிப் பெரியவர்கள் கருதியதாகத் தெரியவில்லை.

தங்கள் பேராசைகளையும், கனவுகளையும், அவற்றை நிறைவேற்றுவதற்குத் தங்களிடமுள்ள ஆற்றல் பற்றி கவலைப்படாமல், அவற்றிற்கு திட்டங்கள் எனப் பெயர் சூட்டிவிட்டு, அவற்றையே இன்று இலட்சியமாக்கிப் பேசி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டினை பொருளாதார நிபுணர்களே எழுப்பியுள்ளனர்.

இப்படி முன்யோசனையும், நிதானமும், தெளிவும் இன்றி தாங்கள் மேற்கொள்ளுகிற நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குவதற்குத் துணைபுரிகின்றனவா என்பதை ஆர அமரச் சிந்தித்துப் பார்க்க வேண்டியதுதான், உபதேசம் புரிவதைவிட, சர்க்கார் செய்யக்கூடிய பலனுள்ள காரியமாகும்.

கிருஷ்ணகிரி தேக்க கால்வாய்கள் திறப்பு

13 மைல் தூரம் வரையில் பாசன வசதியளிக்கும்

சென்னை, நவ. 5—

கிருஷ்ணகிரி தேக்கத் திட்டத்தின் வலது. இடது முக்கியக் கால்வாய்களை 10-ந்தேதியன்று திறப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இடதுபுறக் கால்வாய் சுமார் 1,351 ஏக்கருக்கும், வலதுபுறக் கால்வாய் சுமார் 1,351 ஏக்கருக்கும் பாசனமளிக்கும்.

இடதுபுறக் கால்வாயும், கிளைக் கால்வாய்களும் சுமார் 9 மைல் தூரம் வரையில் சென்று பாசனமளிக்கும். வலதுபுறக் கால்வாயும் கிளைக் கால்வாய்களும் சுமார் 4 மைல் தூரம் வரையில் சென்று பாசனமளிக்கும்.

மேலும் இரு உருக்குத் தொழிற்சாலைகள்

டில்லியின் உத்தேசம்பற்றிகேஸ்கர்

போபால், நவ. 3—

"இரண்டாம் திட்டத்தின் கீழ் மூன்று உருக்குத் தொழிற்சாலைகள் நிர்மாணமாகி வருகின்றன; அத்துடன் மூன்றும் திட்டத்தில் மேலும் இரு தொழிற்சாலைகளை நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது" என்று மத்திய மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் தெரிவித்திருக்கிறார்.

"ஒரு நாட்டின் தொழில் ஆற்றல், அது உற்பத்தி செய்யும் உருக்கினைப் பொறுத்தே கணக்கிடப்படுகிறது என்பதால்தான் உருக்கு உற்பத்திக்கு விசேஷ சிரத்தை காட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தரப்படாமல் ஏமாற்றப்படும் வருமான வரி

'திட்டத்தைச் சீர்குலைக்கும் அளவு அதிகமாகி வருகிறது'

வி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறுகிறர்

புதுடில்லி, நவ. 3—

திட்டத்தினைப் பாதிக்கக்கூடிய பிரதான அம்சங்களாக, வருமான வரி, மற்றும் விற்பனை வரியை தராமல் பலர் ஏமாற்றிவரும் இழிசெயல்கள் இருப்பதாக திட்டக்குழுவின் துணைத் தலைவரான வி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறர்.

அத்துடன், நிலவரி வசூல் பாக்கியும், மாநிலங்களின் கடனும் தமக்குப் பெரும் அச்சம் தருவதாகவும் அவர் கூறியிருக்கிறர்.

வரி விதிப்பு விசாரணைக் கமிஷன், வருமான வரி மற்றும் விற்பனை வரி தராமல் ஏமாற்றப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளது என்றும், இவை திட்ட மதிப்பீடுகளைக் குலைக்கிற வகையில் பெருமளவு நடைபெறுவதாகவும், இவற்றிற்கு எதிராக மக்களின் கருத்து உருவாக்கப்பட வேண்டும் என்றும் வானெலியில் பேசிய அவர் தெரிவித்திருக்கிறர்.

'ஆங்கிலத்திடம் நமக்குச் சண்டையில்லை'

'சுதந்தர உணர்வு ஊட்டியது ஆங்கில மொழி அறிவே'

கோபால ரெட்டி கருத்து

ஐதராபாத், நவ. 4—

"விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பக் காரியங்களுக்குப் பயன்படும் வகையில், பிரதேச மொழிகள் வளர்ச்சி பெறும் வரை: ஆங்கிலம் பல்கலைக்கழகங்களில் நீடித்தாகவேண்டும்" என்ற கருத்தினை, ஆந்திர நிதி மந்திரி பி. கோபால ரெட்டியார் அறிவித்திருக்கிறர்.

"ஆங்கிலத்திடமோ அல்லது அதனுடன்தொடர்புகொண்ட கல்விமுறையினிடமோ நமக்குச் சண்டை இல்லை; மாறாக, சமுதாய உணர்வையும், சுதந்தர எழுச்சியையும் நாம், நமது ஆங்கில அறிவின் மூலம்தான் பெற்றோம்"

என்றும் அவர் கூறியிருக்கிறர்.

கன்னட விழாவொன்றில் பேசுகையிலேயே கோபாலர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறர்.

என். ஜி. ஓ.-வினர் முறையீடு

எம்.பி. சுப்பிரமணியம் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, நவ. 4—

"இந்திய அரசாங்கம் மத்திய ஊதியக் குழுவை நியமித்த பின்னர், மாநிலப் பதிவில்லா அரசாங்க ஊழியர்கள் தங்கள் குறைகளைப்பற்றி மீண்டும் முறையிட்டுள்ளனரா? மாநில அரசாங்கப் பதிவில்லா ஊழியரின் ஊதியம், கிராக்கிப்படி முதலியன பற்றி மத்திய ஊதியக் குழு பரிசீலிக்கவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியுள்ளது பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?"

என்று, நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"என். ஜி. ஓ.-வினர் முறையிட்டுள்ளனர். ஊதிய முறையையும், கிராக்கிப்படியையும் மாற்றியமைக்குமாறு அவர்கள் கேட்டுள்ளனர். அவர்களின் கோரிக்கையை அரசாங்கம் குறித்துக் கொண்டுள்ளது" என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளித்தார்.

கறவை வற்றிய கால்நடைகள்

பாதுகாப்பதற்குப் பண்ணை

கோவைக்கு அருகில் ஏற்படும்

கோவை கூட்டுறவு பால் விநியோகக் கழக ஒத்துழைப்புடன் கோவை மாவட்டம் வீரபாண்டி கிராமத்தில் கறவை வற்றிய கால்நடைகள் பராமரிப்புக்கான பண்ணை ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் அனுமதித்துள்ளது.

இந்தப் பண்ணை 30 ஏக்கர் பரப்பளவு உள்ளதாக இருக்கும்; ஒரே சமயத்தில் 100 கால்நடைகள் அதில் இருக்கமுடியும். ஒரு கால்நடைக்கு மாதம் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 2. பண்ணையில் இரண்டு பொலி காளைகளும் வைக்கப்பட்டிருக்கும்.

இந்தத் திட்டத்துக்கு துவக்கத்தில் ரூ. 30,000 செலவாகும்; நடைமுறைச் செலவு ரூ 10,500 ஆகும்.

ஒழுக்கக் கேட்டினைப் பரப்பினராம்!

உ. பி.-யில் 62 போலீசார் கைது

உ. பி. போலீசாரில் சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டதற்காக, அவர்கள் ஒழுங்கு விதிகளைக் குலைக்கிறர்கள் என்று காரணம் காட்டி சுமார் 62 பேர்களை சர்க்கார் கைது செய்திருப்பதாக இலட்சுமணபுரி செய்தி ஒன்று கூறுகிறது.

முன்னுள் போலீசார் இருவரை நிர்வாகிகளாக்கி ஒரு சங்கம் உருவாக்கினராம், போலீசார்; அந்தச் சங்கத்தினை அங்கீகரிக்க மறுத்துவிட்டது சர்க்கார்; அதன் காரணமாக, சங்க அங்கீகாரம் கோரி ஊர்வலம் நடத்திய 50 போலீசாரையும், அவர்களுக்குத் தலைமைதாங்கியவர்கள் எனக் கூறப்படும் 12 பேர்களையும் சர்க்கார் கைது செய்துள்ளது.

இவர்கள் போலீசாரிடை ஒழுக்கக் கேட்டினைப் பரப்புவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றனர்.

வான வெளிப் பயணத்தைவி[illegible]

'பட்டினிப் பிரச்சினையே முக்கியமானதாகும்'

ஐ. நா. அதிகாரி கருத்து

ரோம், நவ. 4—

"இந்தப் பரந்த உலகில் வாழும் பெரும் பகுதி மக்களுக்கு ஏழ்மையிலிருந்து மேலும் விடுதலை கிடைக்கவில்லை.

"வானவெளிப் பயணம் பற்றிய சிந்தனையைவிட, உலகில் பரவியிருக்கும் பஞ்சத்தையும், பசியையும் போக்குவதற்கான சிந்தனைக்கே முதலிடம் தர வேண்டும்"

என்று, ஐ. நா. உணவு, மற்றும் விவசாய நிறுவனத்தின் தலைவரான இந்தியாவைச் சேர்ந்த விணய் ரஞ்சன்சென் தெரிவித்திருக்கிறர்.

'வசதிக்கு ஏற்றவாறு திட்டம் தீட்டலே முறையாகும்'

முன்னாள் நிதியமைச்சர் மத்தாய் அறிவுரை

எர்ணகுளம், நவ. 2—

ரோட்டரி விருந்தொன்றில் கலந்துகொண்ட, முன்னுள் நிதியமைச்சரும், கேரள பல்கலைக்கழகத்தின் இன்றையத் துணைவேந்தருமான ஜான் மத்தாய் 'திட்டம் ஐந்தாண்டுக் காலத்தில் முடிக்கப்படமுடியாது; எனவே அதன் கால வரையறை அதிகமாக்கப்படவேண்டும்' என்று குறிப்பிட்டார்!

"நாட்டின் இன்றையப் பொருளாதார வசதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் அளவுக்கும் சாதித்துவிட முயலுகிறது" என்று குறிப்பிட்டுவிட்டு அவர் மேலும் பேசியதாவது:—

"இறக்குமதியைக் குறைப்பதன் மூலமே, திட்டத்திற்கான நிதி வசதியைத் தேடிக்கொள்ள முடியும் என்று நினைப்பது தவறு; ஏற்றுமதி அதிகமாக்கப்பட வேண்டும்.

"முதல் திட்டத்திற்கும்—இரண்டாவது திட்டத்திற்கும் உள்ள முக்கிய வேற்றுமை, முன்னதில் செலவு குறைவாகவும் இப்போதைய திட்டத்தில் செலவு அதிகமாகவும் இருப்பதுதான். அதனுலே, இந்தத் திட்டத்தின் காலவரையறை நீட்டப்படுதல் மிகமிக அவசியம்."

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பெண்ணுடம்:

தி. மு. கழகச் சார்பில், காலை 10 மணியளவில் திரு. பி. செ. வேலாயுதனர் தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது; இந்தி மொழியை தமிழ்நாட்டில் பல துறைகளிலும் கட்டாயமாகப் புகுத்துவதாக வரும் கேட்டினை விளக்கியும், கண்டித்தும் முறையே தோழர்கள் வ. தியாகராசன், கு. வேலாயுதம், செ. வேணுகோபால், கை. வைத்திநாதன், ச. முத்துக்குமரன், வ. கோடி முதலானேர் பேசியபின், தீர்மானங்கள் தோழர் சிவ. பழமலை அவர்களால் கொண்டுவரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

கள்ளக்குறிச்சி:

மாலை 4 மணிக்கு தி. மு. க. சார்பில், தோழர் மு. பாண்டியன் தலைமையில் உயர்நிலைப் பள்ளி முன்பிருந்து இந்தி எதிர்ப்பு ஊர்வலம் புறப்பட்டு, பல முக்கிய தெருக்கள் வழியாக வந்து, உயர்நிலைப் பள்ளி முன்பு முடிவுற்றது; அங்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

‘இந்தி ஏகாதிபத்தியத்தை முறியடிப்போம்’

‘தமிழ் காப்போம்-தன்மானம் காப்போம்’

அக். 13-ல் தமிழகம் மேற்கொண்ட சூளுரை

★

தி. மு. க. பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க 13—10—57-ல் நாடெங்கும் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள் —பொதுக்கூட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது :—

விருதுநகர் :

காலை 10 மணியளவில், எம். எஸ். பெரியசாமி படிப்பகம், வி. வி. ஆர். படிப்பகம், அண்ணா மன்றம், எம். ஜி. ஆர். மன்றம், எம். ஜி. ஆர். ஒளியகம், எம். எஸ். பி. எஸ். செந்திக்குமார் நினைவு படிப்பகம், கே. வி. கே. சாமி நினைவு படிப்பகம் ஆகியவைகளின் உறுப்பினர்கள் கூட்டத்தில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாலை 5 மணிக்கு நாடார் பரிபாலன சங்கத்திலிருந்து தோழர்கள் வி. பி. வடிவேல், மா. முத்தையா ஆகியோர் தலைமையில் ஊர்வலம், முக்கிய வீதிகளின் வழியாக எதிர்ப்பு ஒலிகளை முழங்கிக்கொண்டு, அம்மன் கோவில் திடலில் வந்து சேர்ந்தது.

இரவு 7 மணிக்கு தோழர் எஸ். எஸ். தானியேல் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் அம்மன் கோவில் பொட்டலில் நடைபெற்றது; தோழர்கள் எஸ். இரத்தினம், அரங்கநாதன், கணபதி, டி. ஆர். சுப்பிரமணியம், அருள்சாமி ஆகியோர் இந்தியை எதிர்த்துப் பேசினர். தோழர் கே. சுப்பிரமணியம் நீண்ட கை தட்டலுக்கிடையே கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

சென்னை—46வது வட்டம்:

காலை 9 மணிக்கு, வட்ட தி.மு. கழகம், தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகம், மக்கள் முற்போக்கு மன்றம் ஆகியவைகள் சார்பில் தேனாம்பேட்டை, மக்கள் முற்போக்கு மன்றத்திலிருந்து தோழர் கை. பிரமையா தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு வட்டத்தின் முக்கிய தெருக்களின் வழியாக வந்து தி. மு. கழகப் பணிமனை எதிரில் வந்தடைந்து. பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது; கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பம்பாய்—தாராவி :

தி. மு. கழகச் சார்பில், கூட்டம் மத்தியக் குழுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது; தோழர் சு. சண்முகம் அவர்கள் தமிழுக்கும்—இந்திக்குமுள்ள ஏற்றத் தாழ்வுகளை—இலக்கிய மேம்பாடுகளையெல்லாம் தெளிவுற எடுத்தியம்பி, இந்தி நுழைவை வன்மையாகக் கண்டித்து உரையாற்றினர்; பின்னர், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நெடுங்குளம் :

மாலை 4-30 மணியளவில், தோழர் எஸ். அன்னையன் தலைமையில் 50 சைக்கிள்களுடன் கொண்ட ஊர்வலமொன்று சங்கமங்குளம், கடகம், கொல்லாபுரம், மேனாங்குடி, பூங்காவூர், மாங்குடி, கொட்டூர், பண்டாரவடை, பேரளம் வழியாகத் திரும்பி தொத்தங்குடி, கொல்லுமாங்குடி, நாடகுடி, வள்ளங்கணி, மணவத்தடி, பாவட்டக்குடி, நெடுங்குளம் வந்து முடிந்தது; அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் குழந்தைவேல் தலைமையில் தோழர்கள் ஆறுமுகம், எஸ். முத்துக்கண்ணு ஆகியோர் பேசினர்; பின்னர் தோழர்கள் எம். கிட்டப்பா முன்மொழிய, எஸ். கோபால் வழிமொழிய ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கன்னங்குரிச்சி :

மாலை 5 மணிக்கு, கழகப் பணிமனையிலிருந்து, இந்தி எதிர்ப்பு ஒலி முழக்கங்களுடன் ஊர்வலமாகச் சென்று மாலை 6 மணிக்கு, அரசமரத்தடியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் க. கு. குமாரசாமி தலைமையில் தோழர்கள் அ. முத்து, மணி, சேலம் நகராட்சி மன்ற உறுப்பினர் ஏ. மாரியப்பன், வழக்கறிஞர் சிவப்பிரகாசம், உ. ச. வள்ளிநாயகம், ப. கார்த்கேயன், சு. நடராசன், ஆகியோர் பேசியபின், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குன்றத்தூர் :

குன்றத்தூரில் சுவாமி அருணகிரிநாதர் தலைமையில், தி. மு. க. தோழர்களும், அனகாபுத்தூர் தி. மு. கழகத் தோழர்களும் கழகக் கொடிகளையும், இந்தி ஒழிப்பு வாசகங்கள் அடங்கிய தட்டிகளையும் ஏந்திக்கொண்டு மாவட்டச் செயலாளர் தி. ந. சம்பந்தம் இல்லத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, ஊரின் முக்கிய வீதிகள் வழியாக பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை வந்தடைந்தது; அங்கு தோழர் ப.கு. ஆறுமுகம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தலைவரின் முன்னுரைக்குப்பின் சச்சிதானந்த சுவாமிகள் அவர்களும், தோழர் தி. ந. சம்பந்தம் அவர்களும், இந்தி நுழைவால் ஏற்படும் கேடுகளை விளக்கிப் பேசியபின், சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் இந்தி நம் நாட்டிற்கு எந்தெந்த வகையில் கேடு பயக்கும் என்பதைப் பற்றியும், இந்தியை நமது நாட்டிலிருந்து விரட்டியடிக்க பெரு முயற்சி எடுத்துக்கொண்ட தி.மு. கழகத்தைப் பாராட்டியும் சொற்பொழிவாற்றினர். பிறகு கழகச் செயலாளர் டி. கே. சிவகுமாரன் அவர்கள் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை வாசித்து பொதுமக்களின் கைதட்டலுக்கிடையே நிறைவேற்றினர். கூட்டத்தில் குறிப்பாக கோயில் தர்மகர்த்தாக்களும், தேவார திருச்சபையினரும், ஊர்ப் பெரியவர்களும் வந்திருந்து இந்தியை ஒழிப்பதற்குப் பெரும் ஆதரவு தந்தார்கள்.

தாண்டானூர் :

இந்தி எதிர்ப்புப்பற்றி ஊர்வலமும், கூட்டமும் காலை 7 மணிக்கு தோழர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது; ஊர்வலம் கழகக் கூட்டத்தில் முடிவடைந்ததும், தோழர் துரைசாமி தலைமையில் தோழர்கள் பலர் பேசியபின், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கலையம்புத்தூர் :

காலை 9 மணியளவில், திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கச் சார்பில், தோழர் நூர் முகம்மது தலைமையில், தி. மு. க. அலுவலகத்திலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, சின்ன கலையம்புத்தூர், பெரியகலையம்புத்தூர், கெய்காரப்பட்டி, பாலசமுத்திரம், பழைய ஆயக்குடி, புது ஆயக்குடி முதலிய ஊர்கள் வழியாக வந்து மாலை 5 மணியளவில் பழனியில் ஊர்வலம் முடிவுற்றது; கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டிவனம் :

காலை 8 மணியளவில், தோழர் எம். மாரிசாமி தலைமையில் தோழர் காமா-கோதில்மொழியன் மேற்பார்வையில் ஓர் சைக்கிள் ஊர்வலம் நகரின் எல்லாப் பகுதிகளிலும் கண்டனக் குரலை எழுப்பிச் சென்றது. மாலை 5 மணியளவில் திரு. ஏ. பெருமாள் தலைமையில் ஓர் ஊர்வலம் திரௌபதையம்மன் கோவிலின் அருகிலிருந்து ஆரம்பமாகி நகரின் முக்கிய வீதியாகச் சென்று திடலை வந்தடைந்தது; தோழர் எஸ். முனுசாமி இந்தி எதிர்ப்புப் பாடல்களைப் பாடியதும் 6-30 மணியளவில் கூட்டம் எஸ். பாண்டுரங்கன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் வழக்கறிஞர் டி. ஏ. எஸ். பாலன், இராமானுசம், கோட்டையன், காமா-கோதில்மொழியன், ஆ. தங்கவேல், க. அறிவழகன் ஆகியோர் இந்தித் திணிப்பின் அவல நிலைகளையும், ஆட்சியாளரின் தான்தோன்றித்தன நிலைமைகளையும் விளக்கி விரிவுரையாற்றினர்.

மேலப்பாலூர் :

தி. மு. கழகச் சார்பில், தோழர் பி. அலியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் சு. முத்தய்யா, மை. சாகுல் கமீது, செ. சேதுராமலிங்கம் ஆகியோர் இந்தித் திணிப்பு குறித்து விளக்கிப் பேசியபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குலமாணிக்கம் :

செம்பியக்குடி தி. மு. கழகச் செயலாளர் சா. பாண்டியன் தலைமையில் தி. மு. கழகத்திலிருந்து மாலை 4 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு, குலமாணிக்கம், செம்பியக்குடி, ஆலம்பாடி, மேட்டூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று, பின் குலமாணிக்கம் மந்தையை அடைந்தது; அங்கு செயலாளர் பாண்டியன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பலர் பேசியபின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செல்லப்பம்பட்டி :

மாலை 4 மணிக்கு, செயலாளர் தோழர் க. இளங்கோ தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கியத் தெருக்களின் வழியாக வந்து மாலை 6 மணிக்கு என். எஸ். கே. திடலில் தோழர் செ. மா. இரத்தினம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் க. இளங்கோ, ச. முத்துகிருட்டிணன், செ.இரா. மாரிமுத்து, செ. மா. இரத்தினம் ஆகியோர், கட்டாயமாகப் புகுத்தப்படவிருக்கும் இந்தியை விரட்ட வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியபின் ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருக்கழுக்குன்றம் :

திருக்கழுக்குன்றம் தி. மு. கழகக் கிளையுடன் நால்வர் பேட்டை, தேசுமுகிப்பேட்டைகளைச் சேர்ந்த கழகத் தோழர்களும், திரு. வி. க. மன்ற உறுப்பினர்களும் தோழர் ச. புருடோத்தமன் தலைமையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும், நடத்தினர்; தோழர்கள் க. குருசாமி, தி. சி. மதனகோபால், எம். எஸ். ஏ. வகாப், எஸ். குருநாதன் முதலானோர் இந்தியை எதிர்க்கும் நோக்கம் பற்றி விளக்கினர்; இறுதியில் தோழர் அ. இரத்தினவேலு கண்டனத் தீர்மானங்களை வாசித்து மக்களின் கைதட்டலுக்கிடையே நிறைவேற்றினர்.

ஆலங்குடி :

மாலை 5 மணியளவில், தி. மு. கழகப் பணிமனையிலிருந்து சுமார் 200-க்கு மேற்பட்ட சைக்கிள் ஊர்வலம் ஒன்று நகரின் முக்கிய வீதிகளில் சுற்றிவந்தது; தோழர் மு. லெனின் ஊர்வலத்தைத் தலைமைதாங்கி நடத்தினர்; பின்னர் நடைபெற்ற கூட்டத்திற்கு சி. மு. இராமசாமி தலைமை ஏற்றார்; தோழர்கள் கே. வி. சுப்பய்யா, மு. இயலரசன், மு. சுந்தரக்கண்ணு, பாலகிருட்டினன் முதலியோர் இந்தித் திணிப்பின் தீமைபற்றி எடுத்துக் கூறினர்; பின்னர், தோழர்கள் அ. பெரியண்ணன் முன்மொழிய, இரா. மணவழகன் வழிமொழிய பலத்த கைதட்டலுக்கிடையே தீர்மானம் நிறைவேறிற்று.

திருவில்லிப்புத்தூர் :

மாலை 5 மணிக்கு ஓர் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது; ஊர்வலத்தில் ஏராளமான இளைஞர்கள் இந்தி எதிர்ப்பு முழக்கம் செய்தனர். இரவு 7 மணிக்கு ஆண்டாள் கோவில் திடலில் நகரச் செயலாளர் மா. குருசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவது திராவிடத்திற்கு எத்தனை கேடு பயக்குமென்பதை விளக்கி தோழர்கள் சி. பொன்னுசாமி, சி. பி. அண்ணாமலை, ஆ. திராவிடமணி ஆகியோர் பேசினர்; இறுதியில் தலைவரால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியமதியாக் கூடலூர் :

மாலை 6 மணிக்கு, தோழர் என். பெரியசாமி தலைமையில், ஊர்வலம் இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் கழகப் பணிமனையில் துவங்கி முக்கிய வீதிகள் வழி சென்று, கூட்டத் திடலை அடைந்தது. கழகச் செயலாளரும் ஊராண்மைக் கழகத் துணைத் தலைவருமான தோழர் பி. நல்லமுத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தியை எதிர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தியும் விளக்கியும் தோழர்கள் என். பெரியசாமி, கா. இராமசாமி ஆகியோர் பேசியபின் தலைவரால் தீர்மானங்கள் படிக்கப்பட்டு பலத்த கையொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.

சென்னுக்கல்பாளையம் :

இரவு 9 மணியளவில், தி. மு. க. சார்பில், தோழர் ஏ. செ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் ஆ. கந்தசாமி, சு. வேலுச்சாமி, ச. கோவிந்தன், ச. முத்துச்சாமி, ப. அரங்கசாமி ஆகியோர் பேசினர்; பின்னர், ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஏனுதி :

மாலை 4 மணியளவில், தி. மு. கழகச் சார்பில், தோழர் மு. வீரய்யன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் மீ. முகம்மது உசேன், எம் கிருட்டினமூர்த்தி, இராமையா, கலைநேசன், வி. வீரப்பன் ஆகியோர், என் இந்தி ஆட்சிமொழி ஆகக்கூடாது என்பதை விளக்கிப் பேசினர்; பின்னர், தோழர் தனிக்கொடி அவர்களால் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தஞ்சை :

நகர தி. மு. கழகச் சார்பில் பழைய பஸ் ஸ்டாண்டிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, மணிக்கூண்டு, கீழவாசல், கரந்தை, வடக்கு வீதி, மேலவீதி, தெற்கு வீதி, தென்கலங்கம் திலகர் திடல் வந்து கூட்டம் நடைபெற்றது; கல்லூரி மாணவர்கள், மற்றும் சே. வி. கே. சாமி படிப்பகம், உதயசூரியன் படிப்பகம், வள்ளுவர் படிப்பகம், கலைப்பூங்கா மன்றத்தைச் சேர்ந்த தோழர்கள் கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு எஸ். பெத்தண்ணன் தலைமை வகித்தார்; தோழர்கள் கு. சுல்தால், பொன்னிவலவன், கரந்தை கணேசன், சுந்தராசன் ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வேடிச்சிபாளையம் :

தி. மு. கழகச் சார்பில் ஊர்வலமும், கண்டனக் கூட்டமும் நடைபெற்றது; கூட்டத்தில், இந்தி வேண்டாத காரணத்தை விளக்கி தோழர் கலையரசன் பேசினர்; தலைவர் வி. பி. தங்கவேலு தீர்மானங்களை நிறைவேற்றினர்.

முத்துவான்சேரி :

மாலை 6 மணிக்கு தோழர் சா. தங்கராசன் தலைமையில் கண்டன ஊர்வலம் நடைபெற்றது. பின்னர், தோழர் தி. இராமானுசம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் செ. கோவிந்தராசன் வே. சண்முகம், பொ. இராமதாசன், பொ. இராமையன், மு. வி. செகநாதன், சா. தங்கராசன் ஆகியோர் பேசினர்; பின்னர், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புஞ்சைப் புளியம்பட்டி :

இரவு 7 மணிக்கு மணியகாரர் மைதானத்தில் நகர தி. மு. க. செயலாளர் பி. எஸ். சேரமன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் புலவர் பண்ணன், அன்பரசு, பி. ஏ. நாதன் ஆகியோர் பேசியபின், ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சக்கம்பட்டி :

இரவு 7 மணிக்கு, ஊர்வலம் கிழக்குப் புதுத்தெருவிலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாய் சென்று கடை பஜார் மைதானத்தில் வந்து சேர்ந்தது; அங்கு பொதுக்கூட்டம் தோழர் மா. குப்பையாண்டி தலைமையில் அவ்வமயம் நடைபெற்றது; தோழர்கள் ச. வெங்கிடாசலம், சி.சு. முத்துக்காமாட்சி ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்; பின்னர், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொன்மலைப்பட்டி :

தமிழ் மன்றத்தின் சார்பில், 12—10—57 மாலை 6½ மணிக்கு, இந்தி எதிர்ப்புக் கூட்டம் திரு. சி. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது; தோழர் எஸ். நெடுமாறன், இந்தி மொழியின் தகுதியின்மை — தேவையின்மை குறித்தும், அதைக் கட்டாயமாகத் திணிக்கும் மத்திய சர்க்காரின் போக்கைக் கண்டித்தும் பேசினர். இது, மொழிச் சிக்கலாக மட்டும் நம்மிடம் புகுத்தப்படவில்லை என்றும், திராவிட இனத்தின் பண்பாட்டையும், விடுதலையையும், மொழிகளையும் பொருளாதாரத்தையும் பாதிக்கும் விதத்தில் அரசியல் நோக்கத்தோடு புகுத்தப்பட்டிருக்கும் சூழ்ச்சிமிக்க திட்டம் என்றும் குறிப்பிட்டார். பின்னர் தோழர்கள் ஞானதிக்கம், ஜோசப், இராமலிங்கம், சி. பாண்டியன், வீர. சிதம்பரம், நெடுஞ்சேரழன், சுப்பையா, இராமலிங்கம் ஆகியோர் பேசியபின், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் முழுமனதுடன் நிறைவேற்றப்பட்டன.

கழஞ்சூர் :

தி. மு. கழகச் சார்பில், மாலை 4 மணிக்கு தோழர் க. சி. கிருட்டினன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டுச் சென்றது; மாலை 6 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் மு. கோதண்டன் உள்ளிட்ட தோழர்கள் பலர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தேனீ :

16—10—57-ல் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் தோழர் சே. வெற்றி அரசு தலைமையில் மணிக்கூண்டிலிருந்து புறப்பட்டு முக்கியத் தெருக்களின் வழியே இந்தி எதிர்ப்பு ஒலிகளை ஒலித்துக்கொண்டு மணிக்கூண்டுக்கருகிலுள்ள கழகக் கொடி மரத்திற்குக்கீழ், தோழர் ஆ. கருப்பையா தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் சே. வெற்றி அரசு இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை வாசித்தார்; தோழர்கள் மு. தங்கராசன், ஆங்க அரசன் ஆகியோர் பேசியபின், 1938 இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் சிறைசென்ற தோழர்கள் ஆ. கருப்பையா, த. துரைராசன் ஆகிய இருவருக்கும் மலர்மாலை

(2-ம் பக்கம் பார்க்க)

‘மாவட்ட அபிவிருத்தி குழுக்களுக்கு அதிகாரம் தரப்பட வேண்டும்’

சட்டசபையில் ப. உ. சண்முகம் கோரிக்கை

சென்னை, நவ. 5—

ஸ்தல ஸ்தாபனங்களை மாற்றியமைப்பது பற்றி சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ‘வெள்ளை அறிக்கை’ மீது இன்று தொடர்ந்து விவாதம் நடைபெற்றது; நமது கழக உறுப்பினர் தோழர் ப. உ. சண்முகம் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

“மாவட்ட ஆட்சி மன்றங்களை மாற்றியமைக்கும் ‘வெள்ளை அறிக்கை மீது பலர் பல கருத்துக்களைத் தெரிவித்தனர்; அதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று கருத்தறிவித்தனர். என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். நல்ல நோக்கத்திற்காக மாவட்ட ஆட்சி மன்றங்களை மாற்றியமைப்பதும் சீர்திருத்துவதும் அவசியம்தான்.

“அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றப் பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன; குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன; அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், 5 சர்க்கிள்கள் அவசியமா என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறேன். அதனால் குழப்பமே அதிகமாகும் என்பது என்கருத்து.

“உயர்தரக் கல்வியையும் குழுக்களிடம் ஒப்படைப்பது உகந்ததாகத் தோன்றவில்லை; அது எப்படிச் சரிவர வேலை செய்யும் என்று எனக்குப் புரியவில்லை.

“மாவட்ட வளர்ச்சிக் குழு, வெறும் யோசனை கூறும் அமைப்பாகவே உள்ளது; அதற்கு அதிகாரம் தரப்படவில்லை; ஏன் செய்யக்கூடாது? அதிகாரம், மக்களிடம் பகிர்ந்து தரப்பட வேண்டும்; ஒரே இடத்தில் குவித்து வைப்பது கூடாது.

“நகரக் குழுக்களில், ‘இரகசிய அறிக்கை’யை நகர சபைத் தலைவர் எழுதுகிறார்; இது பொருத்தமாக இல்லை. இரகசிய அறிக்கை அதிகாரத்தை நெரிப்பதற்கல்ல— ‘ரெட் டேபீசம்’ குறைப்பதற்கு! இப்படி, கேட்காத சில அதிகாரங்களைக் கொடுத்தும், கேட்ட அதிகாரங்களை மறுத்தும் வந்துள்ளனர். இன்று நகரசபைத் தலைவருக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இப்போது ஆணையாளர் (கமிஷனர்)களுக்கு அதிக அதிகாரம் தரப்பட்டுள்ளது.”

கழகக் கூட்டம்

★

எரகுடி:
(திருச்சி மாவட்டம்)
பெருமாள் கோவில் முன்பு
8—11—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: ப. சந்திரகாசன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
மு. பெ. முத்துக்கருப்பன்
அ. கலியபெருமாள்
கை. ஆறுமுகம்

சென்னை-கோமளீஸ்வரன்பேட்டை

மறுமலர்ச்சி மன்றத் துவக்கவிழா

அண்ணா கலந்து கொள்வார்

★

8—11—57 வெள்ளி மாலை 6-பணிக்கு, சென்னை-கோமளீஸ்வரன்பேட்டை, காஞ்சிபுரம் பச்சையப்ப முதலித் தெருவில் (சித்ரா டாக்கீஸ் பின்புறம்) மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெறும்; தோழர் எம். எஸ். அப்துல் காதர் தலைமையில் **அண்ணா** அவர்களும், தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., அவர்களும் பேசுவர். டேப்-இராதாமாணிக்கம் இன்னிசை விருந்தளிப்பார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

நவம்பர்
7: கோட்டப்பாளையம்
8: எரகுடி
9: பொன்னர்சங்கம்பட்டி
10: காலை—திருச்சி: திருமணம்
மாலை—சேலம்: பொதுக் கூட்டம்
11: மோகூர்
12: விருகாவூர்
13: கீரனூர்
15: ஆர்விபட்டி (மதுரை)
16: பழைய கும்மிடிப்பூண்டி
17: சென்னை 12-வது வட்டம்

அறிவிப்பு

சென்னை 4—11—57 திங்கட்கிழமை ‘நம் நாடு’ இதழில், “இலங்கை தி. மு. கழக சமூக சீர்திருத்த மாநாடு” என்ற தலைப்பில், இலங்கை நாவலப்பிட்டியில் நவம்பர் திங்கள் இறுதியில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி, இலங்கை தி. மு. கழகத்தினரால் அதிகாரபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியல்லவென்பதையும், தவறுதலாக அது பிரசுரமாகி விட்டதென்பதையும் குறிப்பாக இலங்கைத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் அனுமதிபெற்று இலங்கைத் தி. மு. கழகத்தால் யாழ்ப்பாணம் நகரில் கூட்டப்படவிருக்கும் மாநாடு டிசம்பர் திங்கள் இறுதியில் நடைபெறும்.

—ஆசிரியர்

‘பாமரர்கள் தலைவர்களாக வழிவேண்டும்’

‘பஞ்சாயத்துக்களின் உரிமையை பறித்தலாகாது’

சட்டசபையில் களம்பூர் அண்ணாமலை கருத்து

சென்னை, நவ. 5—

மாவட்ட ஆட்சி மன்றங்களை மாற்றியமைப்பது பற்றிய ‘வெள்ளை அறிக்கை’மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு நமது கழக உறுப்பினர் திரு. எஸ். எம். அண்ணாமலை ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

“பஞ்சாயத்து அமைப்புப்பற்றி கூறப்பட்டுள்ளதில், தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன். அப்போதுதான் பாமரமக்கள் தலைவர்களாக வரமுடியும்.

“இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள முறை, பணக்காரர்கள் எளிதில் தலைவர்களாக வருவதற்கு இடமளிக்கிறது; இது கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

“பஞ்சாயத்துக்கள் தங்கள் வரிவசூல், மற்ற வருமானத்தைப் பஞ்சாயத்து யூனியனுக்குச் செலுத்திவிட்டு, பிறகு பஞ்சாயத்துக்கள் தங்கள் தேவைக்கு வேண்டிய பணம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ள முறை மிகவும் தவறானதாகும்; பஞ்சாயத்துக்களின் உரிமையைப் பறிப்பதாகும். பஞ்சாயத்துக்கள் தங்கள் வருமானத்தைச் சேமிப்புப் பாங்கிகளில் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

“நிலச் சீர்திருத்தம் பற்றிய தகராறுகளையும் பஞ்சாயத்துக்களின் முடிவுக்குவிட வேண்டும்.

“மற்றும், வழக்குகள் பற்றித் தீர்ப்பளிக்கவும் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் தரப்பட வேண்டும்.

“இரண்டாந்தரப் பஞ்சாயத்துக்களின் வரவு—செலவை இப்போது, மாவட்டப் பஞ்சாயத்து அதிகாரி தணிக்கை செய்து வருகிறார்; இதை மாற்றி, அந்தப் பஞ்சாயத்துக்களிடமே அந்தப் பொறுப்பைத் தரவேண்டும்.

“கிராம சேவகர்களைப் பஞ்சாயத்து அதிகாரிகளாக நியமிப்பது கூடாது.

“கிராம அதிகாரிகளிடம் வரிவசூல் பொறுப்பு தரப்பட்டுள்ளது; ஏற்கனவே உள்ள ‘பில் கலெக்டர்’கள் இல்லை என்ன?

“பஞ்சாயத்து யூனியன்கள் ஆண்டுக்கு இரண்டுமுறை கூட வேண்டும் என்பதைவிட, குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடவேண்டும் என்று இருக்க வேண்டும்.”

இம்மானுவேல் படுகொலை வழக்கு

எதிரிகளுக்கு ‘வாரண்ட்’

பரமக்குடி, நவ. 5—

இம்மானுவேல் கொலை வழக்கில் ஒரு எதிரியாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள உ. முத்துராமலிங்கத் தேவரை, வரும் நவம்பர் 14-ந் தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு, மாவட்ட நீதிபதி மூலமாக பரமக்குடி ஜுடிஷியல் சப்-மாஜிஸ்திரேட், சென்னை மத்திய சிறையதிகாரிக்கு ‘வாரண்ட்’ பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இதர 10 பேர்களைக் கைது செய்யவும் ‘வாரண்ட்’ பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

சட்டமன்றத்தில் அண்ணா கருத்துரை

(௧-ம் பக்கத் தொடர்ச்சி)

போல, 500 பேர் கொண்ட பஞ்சாயத்திடம் ஓரளவு அதிகாரமும், சில கிராமங்கள் கொண்ட ‘கவுன்சில்’ (குழு) இடம் ஓரளவு அதிகாரமும், சில பஞ்சாயத்துக்களின் கூட்டு அமைப்பான யூனியனிடம் ஓரளவு அதிகாரமும் துண்டு துண்டாகத் தரப்படுகிறது.

“திட்ட அதிகாரிகளும், சேவக்குகளும் திட்டங்களிடமே அதிக அக்கறை காட்டுவார்கள்; மற்றவைகளிடம் காட்டமாட்டார்கள். ஸ்தல ஸ்தாபனங்களைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். மேலும், மத்திய அரசாங்கமே சமுதாய நலத் திட்டத்தைப் பற்றியும், தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தைப் பற்றியும் திருப்தி கொண்டில்லை. பாராளுமன்றத்திலே திட்ட அமைச்சர் டே இதை வெளிப்படுத்தியுள்ளதை அரசாங்கத்திற்கு நினைவுபடுத்துகிறேன்.

“ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தை திட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பது ஜனநாயகத்தைப் பாழ்படுத்துவதாகும்.

“மாவட்ட ஆட்சிமன்றங்கள் பெரிதாக உள்ளன; அதைச் சிறு அமைப்புகளாக்குகிறோம் என்று காரணம் கூறப்படுகிறது இதற்கு நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன்.

“அமைப்புகள், பொருளாதார அடிப்படையில், ‘Economic Units’-களாக பிரிக்கப்படவேண்டும்; அல்லது அரசியல் அடிப்படையில் ‘Political Units’ களாக பிரிக்கப்படவேண்டும். இப்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கை எந்த அடிப்படையிலும் இல்லை.

“தொகுதிகளின் அளவு அரசியல் அமைப்புக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். பொருளாதார அமைப்புகள், பொருளாதார நிபுணர் யோசனைகளைக் கண்டறிந்து அமைப்புகளின் அளவை நிர்ணயிக்க வேண்டும். அதைவிடுத்து, குருடன் கோலை வீசு, நொண்டி காலை வைப்பதைப் போல் இருக்கக்கூடாது.

“திட்டங்களுக்கு மக்கள் ஆதரவையும், ஒத்துழைப்பையும் தேடுவது பற்றி நிதி அமைச்சர் குறிப்பிட்டார்கள்.

“என்னுடைய தொகுதியில் தோண்டப்பட்ட கிணற்றிற்கு கைப்பிடி சுவர் இல்லை. இதைப் பற்றி ரெவினியூ நிறுவனத்திடம் கேட்டால், திட்ட அதிகாரியைக் காட்டுகிறார்கள்; திட்ட அதிகாரி ஸ்தல ஸ்தாபனத்தைச் சுட்டிக் காட்டுகிறார்; யாரைக் கேட்பதென்றே புரியவில்லை. எங்கும் தட்டிக்கழிக்கப்படுகிறது. இந்த நிலையில் மக்கள் ஆதரவு எப்படிக் கிடைக்கும்?

“எங்கு மக்களுக்கு நன்மை ஏற்படுமோ அங்கே மக்கள் ஆதரவு தருகிறார்கள். எங்கெல்லாம் மேல்பூச்சாகத் திட்டங்கள் உள்ளதோ அங்கே மக்கள் ஒத்துழைப்பு தர மறுக்கிறார்கள்.

“நிதி அமைச்சரின் சொந்தத் தொகுதியில் சமுதாய நலத் திட்டத்தின்கீழ் 47 வீடுகள் கட்டியிருந்தனர். நிதி அமைச்சர் நல்லவேளையாக அதைத் திறப்பதற்குச் செல்லவில்லை. 27 வீடுகள் விழுந்துவிட்டன. அந்த அலங்கோலத்திற்குப் பிறகு நான் போனேன். இந்த நிலையில் மக்கள் எப்படி ஒத்துழைப்பார்கள்?

“இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் அரசியல் கட்சிகள் புகுவது கூடாது; கட்சி அரசியல் வேண்டாம்—என்று, நிதி அமைச்சர் யோசனை கூறினார்.

“இதை அந்தக் காலத்திலே உணர்ந்துதான் நான் வளர்ந்த ‘நீதிக் கட்சி’ ஸ்தல ஸ்தாபனங்களில் தலையிடுவது கூடாது என்று திட்டமே கொண்டிருந்தது; ஆனால், நிதி அமைச்சர் இருக்கும் காங்கிரஸ் கட்சி, ஸ்தல ஸ்தாபனங்களில் புகுந்த கட்சியாகும். இன்றுகூட பல இடங்களில் ‘காங்கிரஸ் முனிசிபல் கட்சி’கள் இருக்கின்றன. அவைகளின் தீர்மானமே கவுன்சில் (குழு)களில் நிறைவேற்றப்படுகிறது.

“இப்போது ‘கட்சி அரசியல் ஸ்தல ஸ்தாபனங்களில் வேண்டாம்’ என்று நிதி அமைச்சர் கூறுகிறார். ஏன்? அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கக் கூடும். ஒன்று—‘இந்த நிலை நீண்ட நாள் நீடிக்காது’ என்று அவர் உணர்ந்திருக்கக்கூடும்; மற்றொன்று—‘அதனால் எதிர்பார்த்த பலன் இல்லை’ என்று உணர்ந்திருக்கக்கூடும்.

“இருப்பினும், இது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். இதுவே காங்கிரஸ் கட்சியின் கருத்தாக இருக்குமானால் நான் ஒரு ‘கண்ணியமான உடன்பாடு’ கொள்ளத் தயாராக இருக்கிறேன்” என்று கூறி, மேலும் பல அரிய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். (முழு பேச்சு பின்னர் வரும்).

மாநிலத்தில் ஸ்தலஸ்தாபன நிர்வாகச் சீரமைப்பு

சர்க்காரின் ‘வெள்ளை அறிக்கை’மீது பொறுக்குக் குழு பரிசீலனை

சென்னை, நவ. 5—

மாநிலத்தில் ஸ்தல ஸ்தாபனங்களின் புதிய நிர்வாக அமைப்பு பற்றிய சர்க்காரின் ‘வெள்ளை அறிக்கை’யைப் பரிசீலிப்பதற்காக, 16 பேரடங்கிய பொறுக்குக் குழு ஒன்றினை சட்டசபை அமைத்துள்ளது.

குழுவில், தி. மு. கழக உறுப்பினர் ப. உ. சண்முகம் இடம் பெற்றிருக்கிறார்.

திருவாளர்கள் பி. பக்தவத்சல நாயுடு, எஸ். இராமசாமி நாயுடு, கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், சி. முத்தையா பிள்ளை, ஏ. ஏ. ரஷீத், கே. விநாயகம், ஏ. நேசமணி, கே. என். பழனிசாமி கவுண்டர், சி. ஆர். இராமசாமி, வி. கே. இராமசாமி முதலியார், வி. கே. கோதண்டராமன், கே. சட்டநாதக் கரையாளர், எஸ். பக்கிரிசாமி பிள்ளை, பி. எஸ். சின்னதுரை, மற்றும் டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரன் ஆகியோர் குழுவில் இடம் பெற்றுள்ள இதர 15 பேர்களாவர்.

இதற்குமுன் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் குறுக்கிட்டுப் பேசிய கனம் சுப்பிரமணியம், பஞ்சாயத்து நிர்வாகத்தில் கட்சி அரசியல் இருக்கக் கூடாது என்றும், பஞ்சாயத்துத் தேர்தல்களில் நிற்போர், சட்டசபை, மக்கள்சபைத் தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று விதிக்க வேண்டும் என்றும், தனிப்பட்ட முறையில் தான் இவ்வாறு கருதுவதாகவும் தெரிவித்தார்.

மேலும், ‘வெள்ளை அறிக்கை’யில் காணப்படும் முடிவுகள் இறுதியானவை அல்ல என்றும், குறிப்பிட்டுள்ள உத்தேசங்கள் பற்றி உறுப்பினர்கள் தாராளமாக விவாதித்துக் கருத்தறிவிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

தடை உத்தரவு நீடிப்பு!

சென்னை நகர எல்லைக்குள் தெருக்கள்—ரோடுகள் அல்லது பொது இடங்களில் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெறக் கூடாதென 31—7—57-ல், சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் போலீஸ் கமிஷனர் பிறப்பித்திருந்த தடை உத்தரவு மேலும் இரு வாரங்களுக்கு—நவ. 7-ந் தேதி முதல் 20-ந் தேதிவரை—நீடிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.